# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:81** **தேதி:-10.12.2015**

**புதுடில்லி - 24-25, நவம்பர் 2015 - மத்திய செயற்குழு கூட்ட முடிவுகள்**

அன்பார்ந்த தோழ,ர்களே!

நமது மத்திய செயற்குழு கூட்டம், 2015- நவம்பர், 24-25 தேதிகளில், புது தில்லி, கரோல்பாக்கில் உள்ள தாகா இண்டர்நேஷனல் ஹோட்டலில், எழுச்சிகரமாக நடைபெற்றது. கூட்ட அரங்கத்திற்கு, குஜராத் மாநில முன்னாள் செயலராகப் பணியாற்றி மறைந்த தோழர். ஏ.எம். பாட்டீல் அவர்களின் பெயர் சூட்டப் பட்டிருந்தது. 28 மாநிலச் செயலாளர்களும், 22 மத்திய சங்க நிர்வாகிகளும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அகில இந்தியத் தலைவர் தோழர். பல்பீர் சிங் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். துணைப் பொதுச்செயலாளர் தோழர். ஸ்வபன் சக்கரவர்த்தி, அஞ்சலி தீர்மானத்தை முன் மொழிந்தார். மறைந்த தலைவர்களுக்கு ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப் பட்டது.

மத்திய செயற்குழு கூட்டத்தை, சிஐடியூவின் அகில இந்திய செயலாளர் தோழர். கே. ஹேமலதா துவக்கி வைத்தார். அவர் தனது உரையில், செப்டம்பர் 2 வேலைநிறுத்தத்தின் வெற்றியைக் குறித்தும், வேலைநிறுத்தத்தில் முன்வைக்கப் பட்ட கோரிக்கைகளை விளக்கியும், தேசிய ஜனநாயக கூட்டணி அரசாங்கத்தின் தொழிலாளர் விரோதமான கார்ப்பரேட் ஆதரவு கொள்கைகள் குறித்தும் தொடர்ந்து பிரச்சாரம் செய்ய வேண்டிய அவசியம் குறித்தும் விரிவாகப் பேசினார்.

பொதுச் செயலாளர் தோழர். பி. அபிமன்யு வேலை அறிக்கையை கூட்டத்தில் சமர்ப்பித்தார். அனைத்து மத்திய செயற்குழு உறுப்பினர்களும் விவாதத்தில் திறம்பட பங்கேற்று, பொதுச் செயலாளர் அறிக்கையை செழுமைப் படுத்தினர்.

செப்டம்பர் 2 வேலைநிறுத்தம், BSNL -ஐப் புத்தாக்கம் செய்வதற்கான ஊழியர்-அதிகாரிகள் சங்கங்களின் கூட்டமைப்பின் தொடர்ச்சியான நடவடிக்கைகள், ஊழியர்கள் கோரிக்கைகளின் தற்போதைய நிலவரம், கேரள மாநிலத்திலும், ஜாம்ஷெட்பூரிலும் ஏற்பட்ட பழி வாங்கும் நடவடிக்கைகள், சங்கத்தைப் பலப் படுத்துவது, தற்காலிக / ஒப்பந்தத் தொழிலாளர்கள் மற்றும் ஓய்வூதியர்களின் பிரச்னைகள் உள்ளிட்ட அம்சங்கள் விவாதத்தில் ஆழமாக ஆய்வு செய்யப் பட்டன. பொதுச் செயலாளரின் தொகுப்புரைக்குப் பிறகு, அறிக்கை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப் பட்டது. பல்வேறு முடிவுகள் ஏகமனதாக எடுக்கப் பட்டன. முக்கிய அம்சங்களின் மீது தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

**BSNL -ஐப் புத்தாக்கம் குறித்த எழுச்சிகரமான கருத்தரங்கம் :**

மத்திய செயற்குழு கூட்டத்தின் மறுபுறம், 24.11.2015 அன்று மாலையில், உத்வேகமூட்டும் கருத்தரங்கத்தை BSNL ஊழியர் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. மத்திய செயற்குழு உறுப்பினர்களோடு, ராஜஸ்தான், ஹரியானா, பஞ்சாப், உ.பி. (மேற்கு), உ.பி.(கிழக்கு) மற்றும் NTR மாநிலங்களிலிருந்து மாவட்டச் செயலாளர்களும் கருத்தரங்கத்தில் கலந்து கொண்டனர்.

கருத்தரங்கத்திற்கான ஏற்பாடுகளையும், கூட்ட அரங்கத்தின் அலங்காரங்களையும், கார்ப்பரேட் அலுவலக மாநிலச் சங்கமும், NTR மாநிலச் சங்கமும் மிகச் சிறப்பான முறையில் செய்திருந்தனர்.

நமது அகில இந்தியத் தலைவர் தோழர். பல்பீர் சிங் தலைமை தாங்கிய இக்கருத்தரங்கத்திற்கு வருகை தந்தவர்களை துணைப் பொதுச் செயலாளர் தோழர். ஸ்வபன் சக்கரவர்த்தி வரவேற்று உரையாற்றினார். கருத்தரங்கத்திற்கான அறிமுக உரையை நமது பொதுச் செயலாளர் தோழர். பி. அபிமன்யு கூட்டத்தில் சமர்ப்பித்து, கருத்தரங்கை துவக்கி வைத்தார். அவரைத் தொடர்ந்து, நமது நிறுவனத்தின் தலைமை நிர்வாக இயக்குநர் - திரு. அனுபவ் ஸ்ரீவத்ஸவா, இயக்குநர் (CFA) - திரு. என்.கே.குப்தா, இயக்குநர் (மனித வளம்) - திருமிகு சுஜாதா ரே ஆகியோர் உரையாற்றினார். மத்திய செயலகத்தின் சார்பில் அமைப்புச் செயலரும், மாநிலச் செயலாளர்மான தோழர். ஆர். எஸ். சௌஹான் நன்றியுரையாற்றினார்.

இந்தக் கருத்தரங்கம் கூட்டத்திற்கு வந்திருந்த உயர் மட்ட அதிகாரிகள் உட்பட அனைவருக்கும் உற்சாகத்தையும் உத்வேகத்தையும் அளித்ததோடு, ”BSNL புத்தாக்கம் வெகு தொலைவில் இல்லை” என்ற வலுவான செய்தியையும் வழங்கியது.

**<u>தோழர். V.A.N. நம்பூதிரி அவர்களுக்கு பாராட்டு</u>**

கல்கத்தா அகில இந்திய மாநாட்டில் தோழர். V.A.N. நம்பூதிரி நமது அகில இந்திய சங்கத்தின் நிர்வாகி பொறுப்பில் இருந்து விடுவிக்கப் பட்டு சங்கத்தின் புரவலராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். தொழிற்சங்க இயக்கத்துக்கு தோழர். V.A.N. நம்பூதிரி ஆற்றிய பங்கினையும், இயக்கத்தை வலுப்படுத்த அவர் மேற்கொண்ட தியாகங்களையும் போற்றும் விதத்தில், 2015 ஜூன் மாதம் டல்ஹௌசியில் நடைபெற்ற மத்திய செயற்குழு கூட்டத்தில் அவரை கௌரவிக்க திட்டமிடப் பட்டிருந்தது. ஆனால் தோழர். ஏ.எம். பாட்டீல் அவர்களின் திடீர் மரணம் காரணமாக அந்நிகழ்ச்சி நடைபெறவில்லை.

எனவே, தற்போதைய கூட்டத்தின் முதல் நாள் மாலையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. மூத்த மாநிலச் செயலாளர்கள் தோழர்கள் ஜே. சம்பத்ராவ், எம்.எஸ்.காடியான், சி.கே.குண்டண்ணா மற்றும் பொதுச் செயலாளர் தோழர். பி. அபிமன்யு ஆகியோர் அவரது பங்களிப்பைப் பாராட்டி உரையாற்றினர். துணைத் தலைவர் தோழர். அனிமேஷ் மிஸ்ரா அவருக்கு நினைவுப் பரிசினை வழங்கினார். துணைப் பொதுச் செயலாளர் தோழர். ஸ்வபன் சக்கரவர்த்தி அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

**<u>மத்திய செயற்குழு முடிவுகள்</u>** :

1) செப்டம்பர் 2 பொதுவேலைநிறுத்தம் பெரும்பாலான மாநிலங்களில் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த வேலை நிறுத்தத்தில் பங்கேற்ற அனைத்து ஊழியர்களுக்கும் மத்திய செயற்குழு பாராட்டுக்களை இதய பூர்வமாகத் தெரிவித்துக் கொள்கிறது. இந்த வேலைநிறுத்தத்திற்கான ஆயத்தப் பணிகளைத் திறம்பட மேற்கொண்ட அனைத்து மாவட்டச் செயலாளர்களுக்கும், மாநிலச் செயலாளர்களுக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிரது. மேலும், நவீன தாராளமயக் கொள்கைகள் குறித்தும், மத்திய தொழிற்சங்கங்களின் 12 அம்ச கோரிக்கைகள் குறித்தும் தொடர்ந்து பிரச்சாரம் மேற்கொள்வது எனவும் மத்திய செயற்குழு முடிவு செய்தது.
2) BSNL நிறுவனத்தின் நிதி நிலைமையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து மத்திய செயற்குழு திருப்தி தெரிவித்தது. மாநிலச் சங்கங்களும், மாவட்டச் சங்கங்களும் கூட்டமைப்பின் இதர நிர்வாகிகளோடு இணைந்து, தீவிரமான சந்தைப் படுத்தும் பணியைச் செய்வதையும், பழுதற்ற சேவை வழங்குவதையும் மேற்கொண்டால் BSNL நிறுவனத்தின் புத்தாக்கம் சாத்தியமானதே ! என மத்திய செயற்குழு அறைகூவல் விடுத்துள்ளது.
3) துணை டவர் நிறுவனம் உருவாக்கப் பட வேண்டும் என்ற மத்திய மந்திரி சபையின் முடிவு BSNL நிறுவனத்தின் நலனுக்கானதல்ல என்ற முடிவுக்கு மத்திய செயற்குழு வந்துள்ளது. ஏனெனில்,

அந்தத் துணை நிறுவனத்தின் கேந்திரமான பங்குதாரராக ஒரு தனியார் நிறுவனம் நுழைக்கப் படாது என்பதற்கோ, எதிர்காலத்தில் அதன் பங்குகள் விற்கப் படாது என்பதற்கோ எந்த உத்தரவாதமும் இல்லை. எனவே, துணை டவர் நிறுவனம் உருவாக்கப் படுவதை எதிர்த்து அனைத்து விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள மத்திய செயற்குழு முடிவு செய்துள்ளது.

4) BSNL - MTNL நிறுவனங்கள் இணைப்பிற்கு IIM - பெங்களூர் நிறுவனத்தால் ஆலோசனையாக வழங்கப் பட்டுள்ள பல்வேறு அம்சங்களையும் குறித்து விவாதித்த பிறகு, மேலும் இது குறித்து கூட்டமைப்பில் விவாதிப்பது எனவும், BSNL நிறுவனத்தின் நலன்களையும், அதன் 2.25 லட்சம் ஊழியர்களின் நலன்களையும் பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வது என முடிவு செய்யப் பட்டது.

5) கம்பி வழி பிராட்பேண்ட் இணைப்புகளை வழங்குவதற்கும், பராமரிப்பதற்கும் அயல்பணிக்கு அனுமதிப்பது குறித்து, கூட்டம் விவாதித்தது. இது பெரும்பான்மையான டெலிகாம் மெகானிக்குகளையும், TTA ஊழியர்களையும் உபரியாக்கும். அயல்பணியைத் தவிர்ப்பதற்கு நமது சங்கம் அளித்த மாற்று ஆலோசனைகளைப் பரிசீலிக்காமல், கார்ப்பரேட் நிர்வாகம் அயல்பணியை அனுமதிப்பது குறித்து நமது கூட்டம் கவலையோடு பரிசீலித்தது. பிராட்பேண்ட் சேவைகளில் அயல்பணியை அனுமதிக்கும் பொறுப்பற்ற இந்தச் செயலை நிறுத்துவதற்கு, மத்திய தலைமையகம் விடுக்கும் அனைத்து அறைகூவல்களையும் முக்கியத்துவத்தோடு கவனித்து முழுமையாக நிறைவேற்றுமாறு அனைத்து மாநிலச் சங்கங்களுக்கும் இக்கூட்டம் அறைகூவல் விடுக்கிறது.

6) கேரள மாநிலத்திலும், ஜாம்ஷெட்பூரிலும் மேற்கொள்ளப் பட்ட பழிவாங்குதல்கள் குறித்து மத்திய தலைமையகம் எடுத்த நடவடிக்கைகள் திருப்தி அளிப்பதாக மத்திய செயற்குழு முடிவு செய்தது.

7) நேரடி நியமன ஊழியர்களுக்கு 30% ஓய்வுகால பலன்கள் அளிப்பது குறித்து நிர்வாகம் காலதாமதம் செய்வது பற்றி கூட்டத்தில் ஆழமான கவலை தெரிவிக்கப் பட்டது. ஓய்வூதிய நிதிக்கு ஊதியத்தில் 12% அளிப்பது குறித்த கூட்டமைப்பின் கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றுமாறு நிர்வாகத்தை கூட்டம் வலியுறுத்தியுள்ளது.

8) டல்ஹௌசி மத்திய செயற்குழு கூட்டத்தின் முடிவின் அடிப்படையில், டிசம்பர் மாதத்தில் பயிலரங்கங்கள் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது குறித்து கூட்டம் திருப்தி தெரிவித்தது. பயிலரங்கங்களை வெற்றிகரமாக நடத்துவதற்கான அகில இந்திய மையத்தின் முடிவுகளை அமுல்படுத்துமாறு மாவட்ட மாநில சங்கங்களை கூட்டம் வலியுறுத்தி உள்ளது.

9) நமது சேவையின் தரத்தை மேம்படுத்துவதில் WORKS COMMITTEE சக்திமிக்க ஆயுதமாகப் பயன்படுத்தப் பட முடியும் என்பதை கூட்டம் மீண்டும் வலியுறுத்துகிறது. எனவே அந்த கூட்டங்கள் தொடர்ச்சியாக நடத்தப் படுவதை மாவட்டச் சங்கங்கள் உத்தரவாதம் செய்ய வேண்டும் என்று கூட்டம் வலியுறுத்துகிறது. மேலும் மாநில அளவிலான WORKS COMMITTEE உருவாக்கப் படுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மத்திய தலைமையகத்தைக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

10) டல்ஹௌசி கூட்டத்தில் முடிவெடுக்கப் பட்ட பிறகும், ஹரியானா, NTR மற்றும் ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களில் மாநில கவுன்சில் கூட்டம் நடைபெறாதது குறித்து கூட்டம் கவலை தெரிவிக்கிறது. மாநில கவுன்சில் கூட்டங்கள் நடத்துவதற்கு மேற்கண்ட மாநிலச் சங்கங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

11) மத்திய தலைமையகத்தால் கேட்கப் பட்ட, செப்டம்பர் 2 வேலை நிறுத்த மாவட்ட வாரியான விவரங்கள் அடங்கிய அறிக்கையை பல மாநிலச் சங்கங்கள் அனுப்பவில்லை. மாவட்ட வாரியான உறுப்பினர் விவரங்களையும் அனுப்பவில்லை. இவற்றை மாநிலச் சங்கங்கள் உடனடியாக அனுப்ப வேண்டும். எதிர்காலத்தில், மத்திய தலைமையகம் கேட்கும் அறிக்கைகளைத் தவறாமல் தாமதமின்றி மாநிலச் செயலர்கள் அனுப்ப வேண்டும்.

12) முதலாவது ஊதிய நிர்ணயத்தின்போது ஏற்பட்ட அனாமலிகள் சம்பந்தமாக கார்ப்பரேட் அலுவலகம் மாநில தலைமை பொது மேலாளர்களிடம் விவரங்களைக் கேட்டுள்ளது. எனினும் பெரும்பாலான மாநிலங்களிலிருந்து விவரங்கள் தரப் படவில்லை. எனவே, கார்ப்பரேட் அலுவலகத்தில் இப்பிரச்னை தீர்க்கப் படாமல் உள்ளது. அனைத்து மாநிலச் செயலாளர்களும் அவரவர் தலைமைப் பொது மேலாளர்களைச் சந்தித்து, மாநிலங்களிலிருந்து இந்த விவரங்கள் உடனடியாக அனுப்பப் படுவதை உத்தரவாதம் செய்ய வேண்டும்.

13) ஊதிய தேக்க நிலை, 30% ஓய்வூதிய பலன்கள், அனாமலிகள், ஓய்வூதியர்களுக்கு 78.2% இணைப்பு, PLI நிர்ணயம், SC/ST ஊழியர்களுக்கு தகுதி மதிப்பெண்களில் தளர்வுகள், கேடர் பெயர் மாற்றம், பதவி உயர்வு தொடர்பான பிரச்னைகள் உள்ளிட்ட பிரச்னைகளுக்கு தீர்வு காண விரைந்து நிர்வாகத்தை நிர்ப்பந்திக்க வேண்டும் என மத்திய தலைமையகத்தைக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

14) டாக்டர். பி.ஆர்.அம்பேத்கரின் 125- வது பிறந்த தின விழாவை ஒட்டி, கருத்தரங்கங்கள் மற்றும் சிறப்புக் கூட்டங்கள் போன்ற நிகழ்ச்சிகளை எழுச்சிகரமாக நடத்துமாறு, மாவட்ட மற்றும் மாநிலச் சங்கங்களை கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

**<u>தீர்மானங்கள்</u>**

1) செப்டம்பர் 2 வேலைநிறுத்தம் குறித்தும்,
2) BSNL புத்தாக்கம் குறித்தும்,
3) நாட்டில் வளர்ந்து வரும் சகிப்புத்தன்மையின்மையைக் கண்டித்தும், மத நல்லிணக்கத்தை வலியுறுத்தியும்,
4) தீர்க்கப்படாத பிரச்னைகளுக்கு தீர்வு காணவும்,
5) ஓய்வூதியர்களுக்கு 78.2% பஞ்சப்படி இணைப்பு வழங்கக் கோரியும்,
6) BSNL சேவைகளை மேம்படுத்தவும்,
7) பவர்கிரிட், ரெயில்டெல் ஆகிய BSNL -இன் பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து தேசீய ஆப்டிக்கல் ஃபைபர் நெட்வோர்க்கை எடுத்து அதைத் தனியாருக்குத் தாரை வார்க்கும் முயற்சியை எதிர்த்தும்,
8) பஞ்சப் படி இணைப்பு, ஊதிய மாற்றப் பேச்சு வார்த்தை குறித்தும்,
9) ஊழியர்களுக்கு அரசியல் உரிமைகளை அனுமதிப்பது குறித்தும்

கூட்டத்தில் தீர்மானங்கள் :நிறைவேற்றப் பட்டன.

புதுதில்லி மத்திய செயற்குழு கூட்டத்தில் எடுக்கப் பட்டுள்ள முடிவுகளை வெற்றிகரமாக அமுல்படுத்தி அனைத்து மத்திய சங்க நிர்வாகிகளும், மாநில - மாவட்டச் செயலாளர்களும் முழுமையாக ஒத்துழைக்குமாறு பொதுச் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**BSNL ஊழியர் சங்கம் வாழ்க !**

**தொழிலாளர் ஒற்றுமை ஓங்குக !**

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**